சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்புத்துறை – விளம்பரம் – 75–வது சுதந்திர தின விழாவினை தேசிய மற்றும் சர்வதேச அளவில் கொண்டாடுவது– அரசின் அனைத்து விதமான விளம்பரங்களிலும் 75–வது சுதந்திர தின சிறப்பு வாசகம் மேற்கொண்டு வெளியிடுவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (விளம்பரம்)த் துறை

அரசாணை (வாலாயம்) எண். 245

நாள். 24.08.2021
திருவள்ளுவராண்டு 2052
பிலவ வருடம்–ஆவணி மாதம்–8ஆம் நாள்

ஆணை:

75–வது சுதந்திர தின விழா தேசிய மற்றும் சர்வதேச அளவில் கொண்டாடுவது குறித்து தலைமைச்செயலாளர் அவர்கள் தலைமையில், முதன்மைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, செயலாளர், பொதுத் துறை, செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை ஆகியோருடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், 75–வது சுதந்திர தின விழாவினை சிறப்பிக்கும் வகையில் கீழ்காணும் வாசகத்தினை அரசின் அனைத்து விதமான விளம்பரங்களிலும் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்
சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம். "

2. அரசின் கவனமான பரிசீலினைக்குப் பின்னர், 75–வது சுதந்திர தின விழா தேசிய மற்றும் சர்வதேச அளவில் கொண்டாடுவது குறித்து மேற்கண்ட சிறப்பு வாசகத்தினை அரசின் அனைத்து விளம்பரங்களிலும் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ள அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
அனைத்துத்துறை செயலாளர்கள், சென்னை–9.
தலைவர்கள், அனைத்து அரசுத்துறை வாரியங்கள் மற்றும் நிறுவனங்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

...2

அனைத்து அரசுத்துறை நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள்.
மேலாண்மை இயக்குநர்கள், கோ/ஆப்டெக்ஸ், / பூம்புகார்,
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை.
பதிவாளர், உயர்நீதி மன்றம்,சென்னை-600 108.
பதிவாளர், அனைத்துப் பல்கலைக்கழகங்கள்.
ஆணையர்கள், அனைத்து மாநகராட்சிகள்
அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
அரசு அங்கீகாரப் பட்டியலில் உள்ள அனைத்து விளம்பர நிறுவனங்கள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (செய்தி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

24/08/21